## மாநகராதிபதி டேவிட் மிலர் விடுக்கும் செய்தி



**இப்பொழுதே ஒரு சதம்! என்னும் இணையத் தளத்தை நாடியதற்கு நன்றி.**

மத்திய, மாகாண அரசுகளைவிட கனடிய மாநகரங்களே எமது மக்களுக்கு அதிக சேவைகளை ஆற்றி வருகின்றன. எனினும் மாநகரங்களின் வருமானம் அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்றப் போதாது. பொருள்வளப் பெருக்கத்தைப் பேணுவதற்கு வேண்டிய அடிப்படைக் கட்டமைப்புக்கும், அதனை ஏற்படுத்துவதற்குக் கிடைக்கும் பணத்துக்கும் இடையே ஒரு பாரிய இடைவெளி விழுந்துள்ளது.

அடிப்படைக் கட்டமைப்பு பேணப்படுவதையும், முக்கிய சேவைகள் மேற்கொள்ளப் படுவதையும், சூழலுக்கு உசிதமான முறையில் எதிர்கால அடிப்படைக் கட்டமைப்பு இடம்பெறுவதையும் உறுதிசெய்யு முகமாக தற்போதைய பொருள்-சேவை வரியில் ஒரு சதத்தை மாநகரங்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு மத்திய அரசை இப்பொழுதே ஒரு சதம்! நாடும் இயக்கம் வேண்டிக்கொள்கிறது. கனடிய பொருள்வளத்தின் உந்துவிசையாய் விளங்குபவை மாநகரங்களே. ஆண்டுதோறும் கோடிக் கணக்கான தொகையை அவை மத்திய அரசுக்குக் கொடுத்துதவுகின்றன. மத்திய அரசே சுட்டிக்காட்டியது போல், பொருள்-சேவை வரியைக் குறைக்க வாய்ப்புண்டு. எனவே கனடாவின் மிகப்பெரிய நகரங்களின் முக்கிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு சதத்தைப் பகிர்ந்தளிக்க வாய்ப்புண்டு என்றே நாம் நம்புகிறோம்.

இந்த இணையத் தளத்தில் நாம் முன்வைத்துள்ள விபரங்களைச் சற்று வாசித்துப் பார்க்கவும். ரொறன்ரோ மாநகரத்துக்கு உங்கள் ஆதரவைத் தெரிவிக்கு முகமாக இணையமூல விண்ணப்பத்தில் ஒப்பமிடும் வாய்ப்பையும், குமிழ் அல்லது ஒட்டி ஒன்றை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் கருத்தில் கொள்ளவும். அத்துடன் உங்கள் நாடாளுமன்ற உறுப்பினருடன் நேரடியாகத் தொடர்புகொண்டு, பொருள்-சேவை வரியில் ஒரு சதத்தை ரொறன்ரோ மாநகரத்துக்குக் கொடுக்க வேண்டும் என்னும் கோரிக்கையை நீங்கள் ஆதரிப்பதாகத் தெரிவிக்குமாறும் இத்தால் நான் வேண்டிக்கொள்கிறேன்.

அடிப்படைக் கட்டமைப்புக்குப் போதிய நிலைத்த நிதிவளத்தையும், மாநகரம் வகிக்கும் பொறுப்புகளுக்குத் தகுந்த நிதிவளத்தையும் அளிக்குமாறு மத்திய, மாகாண, அரசுகளை இத்துறையில் ஈடுபாடுகொண்ட ரொறன்ரோ வணிக சபை, கனடா கலந்தாய்வுச் சபை, ஊடகங்கள், சமூகங்கள் பலவும் பல்லாண்டுகளாகக் கோரி வந்துள்ளன. மாநகரத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு வேண்டிய நிதிவளம் குறித்து அறிக்கைகள் பலவும் விடுக்கப்பட்டுள்ளன – கனடிய மாநகரங்களின் எதிர்காலத்தை தகுந்த முறைப்படி பவுத்திரப்படுத்துவதற்கு இந்நிதிய இடைவெளி குறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றே அனைத்து அறிக்கைகளும் தெரிவித்துள்ளன. நீங்கள் இதில் ஈடுபடவேண்டிய தருணம் இதுவே.

மாநகரங்களுக்குப் பெரிதும் தேவைப்படும் பின்வரும் மூன்று விடயங்களையும் பொறுத்தவரை இப்பொழுதே ஒரு சதம்! நாடும் இயக்கம் முக்கிய பங்கு வகிக்கிறது:

1. பெருகிவரும் எமது பொருள்வளத்துக்குத் துணைநின்று, எமது சூழலைப் பாதுகாக்கும் போக்குவரத்துச் சேவையை மேற்கொள்வதற்கான ஒரு தேசிய போக்குவரத்துத் திட்டம்.
2. ஒன்ராறியோ மாகாணம் அதன் திட்டங்களுக்காகும் செலவை, குறிப்பாக அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு, இன்று மாநகரத்தின் செலவில் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகள், வீடமைப்பு என்பவற்றுக்காகும் செலவை

அது மீண்டும் ஏற்றுக்கொள்ளல். அதற்காகும் செலவை வெறும் உடைமை வரியைக் கொண்டு எம்மால் செலுத்த முடியாது.

3. பொருள்வளத்துடன் சேர்ந்து பெருகும் வருமானத்தில் ஒரு பங்கு.

மாநகரங்களும் பொருள்வளமும் ஓங்குவதற்கு வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பை அமைத்துப் பேணுவதன் ஊடாக அத்தகைய விருத்திக்காகும் செலவை மாநகரங்களே இறுத்து வருகின்றன. தேசிய பொருள்வளத்துக்கு மாநகரங்கள் பாரிய தொண்டாற்றி வருகின்றன. எனினும் பொருள்வளத்துடன் சேர்ந்து பெருகும் வருமானத்தில் எதுவும் இன்று மாநகரங்களுக்குக் கிடைப்பதில்லை.

மத்திய, மாகாண, வருமான வரி, உடைமை வரி உட்பட ரொறன்ரோ வாசிகள் செலுத்தும் வரி முழுவதையும் பொறுத்தவரை ஒவ்வொரு டாலர் வரியிலும் ஏறத்தாழ எட்டுச் சதம் மட்டுமே மாநகரத்துக்குக் கிடைக்கிறது. மாநகரம் ஆற்றும் சேவைகளுக்கும், அடிப்படைக் கட்டமைப்புக்கும், அன்று மாகாணத்தின் செலவில் மேற்கொள்ளப்பட்டு இன்று மாநகரத்தால் மேற்கொள்ளப்படும் சமூக சேவைகளுக்கும் ஆகும் செலவு, உடைமை வரி இறுப்போர்க்கு மிகுந்த சுமையாய் மாறியுள்ளது.

பொருள்-சேவை வரியில் ஒரு சதம் என்பது, ரோறன்ரோ மாநகரத்தின் அடிப்படைக் கட்டமைப்புக்கு – கனடாவின் மிகப்பெரிய நகரத்தைப் பேணுவதற்கு வேண்டிய வீதிகள், பாலங்கள், கடுகதிச் சாலைகள் மற்றும் பிற கட்டமைப்புகள், திட்டங்களுக்கு – பருமட்டாக $41 கோடி கிடைப்பதற்கு நிகராகும்.

எமது மாநகரம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது. எமது மாநகரத்தைப் பேணுவதற்கு வேண்டிய நிதிவளத்தை ஈட்டுவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டிய தருணம் இதுவே.

உங்கள் மாநகரத்துக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவுக்கு நன்றி.

டேவிட் மிலர்

மாநகராதிபதி

இணையமூல விண்ணப்பம்

பொருள்-சேவை வரியில் ஒரு சதத்தை ரொறன்ரோ மாநகரத்துக்குப் பகிர்ந்தளிக்குமாறு கனடிய அரசாங்கத்தை கீழே ஒப்பிமிட்டவர்காளகிய நாங்கள் இத்தால் வேண்டிக் கொள்கிறோம். பொருள்வளத்துடன் சேர்ந்து பெருகும் வருமானம் வாய்க்கப்பெறாத ரொறன்ரோவே கனடாவின் மிகப்பெரிய நகரமும், ஆறாவது மிகப்பெரிய ஆட்சிப் பீடமும் ஆகும். கனடாவின் பொருள்வளத்துக்கு ரொறன்ரோ மாநகரமே உந்துவிசை அளிக்கிறது. மத்திய, மாகாண, உள்ளூர் ஆட்சிப் பீடங்கள் அனைத்திடமும் முன்வைக்கப்பட்ட எண்ணிறந்த அறிக்கைகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளன. ரொறன்ரோ மாநகரம் முதலீட்டுக்கு உகந்த உலக மாநகரமாய்த் திகழவேண்டும் என்றால், ரொறன்ரோ மாநகர மக்களுக்கு, பொருள்-சேவை வரியில் இப்பொழுதே ஒரு சதம் தேவை!

**இந்தக் குமிழை Sign Online Petition சுட்டி விண்ணப்பத்தில் ஒப்பமிடவும்**

2006ம் ஆண்டின் ரொறன்ரோ மாநகரச் சட்டத்தின் 134ம் பிரிவின்படியான அதிகாரத்தைக் கொண்டே இப்படிவத்தில் காணப்படும் தனியாள் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் திரட்டப்படும் விபரங்கள், பொருள்-சேவை வரியில் இப்பொழுதே ஒரு சதம் நாடும் இயக்கத்தின் ஓர் அங்கமாக ஒரு விண்ணப்ப உருவில் மத்திய அரசிடம் முன்வைக்கப் படும். இவ்வாறு விபரம் திரட்டுவது குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால் தொடர்புகொள்ளவும்: முகாமையாளர், ஊடக உறவு—விடயங்கள் கையாள்கை, ரொறன்ரோ மாநகரம், 100 Queen Street West, 7th Floor, West Tower, Toronto, Ontario, M5H 2N2. தொலைபேசி: 416-392-8937.